இலங்கை நிருவாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த பணிப்பாளர் (மறுசீரமைப்பு) பதவி

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு

இலங்கை நிருவாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த பணிப்பாளர் (மறுசீரமைப்பு) பதவிக்கு நியமனம் செய்வதற்கு இலங்கை நிருவாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த தகுந்த மற்றும் தகைமைவாய்ந்த அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.'

வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01

இலங்கை நிருவாக சேவையின் தரம் I ஐச் சேர்ந்த தகுந்த மற்றும் தகைமைவாய்ந்த அலுவலர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில், 11 வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள, இலங்கை நிருவாக சேவையின் தரம் II ஐச் சேர்ந்த அலுவலர்களை, இப்பதவியில் முழு நேர அடிப்படையில் கடமைகளை நிறைவேற்றுவதன் அடிப்படையில் சேவைக்கு அமர்த்தும் வகையில் நியமனம் செய்ய கவனம் செலுத்தப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதிகள் 121 இற்கமைய, கடமைகளை நிறைவேற்றுவதற்கு சேவைக்கு அமர்த்தும் நியமனங்களை, மேலும் ஒரு வருட காலத்திற்கு நீடிப்புச் செய்வதற்குள்ள ஆற்றல் பற்றி ஆராய்தல் உள்ளடங்களாக, உச்சளவாக ஒரு வருட சேவைக் காலத்திற்கு மேற்கொள்ளப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் முறையாக தயார் செய்துகொள்ளும் தமது கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் அனுபவங்கள் பற்றிய சுருக்க விபரத்தை (CV), திணைக்களத் தலைவரின் சிபாரிசு சகிதம், செயலாளர், நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, இலக்கம் 19, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி அல்லது அத் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

தாமதமாகக் கிடைக்கின்ற விண்ணப்பப்படிவங்கள், பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் மற்றும் உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைய தயார் செய்யப்படாதுள்ள விண்ணப்பப்படிவங்கள் <u>அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.</u>

**2.0.** விண்ணப்பதாரியின் கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகள் பற்றிய சுருக்க விபரம் (CV)

**2.1.** அனுபவம் மற்றும் தொழில்சார் தகைமைகள்;

I. சர்வதேச உறவுகள் துறையில் 3 வருட அனுபவத்தைப் பெற்றுள்ளவர்கள தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்..(சர்வதேச நிறுவங்களுடனான ஒருங்கிணைப்பு அனுபவத்திற்காக புள்ளிகள் வழங்கப்படும்.)

II. இலங்கை நிருவாக சேவை பிரமாணக் குறிப்பின் 13.2 (அ) i பிரிவுக்கு அமைய பட்டப் பின் படிப்பைப் பெற்றிருத்தல்.

III. ஆங்கில மொழித் தேர்ச்சியைப் பெற்றிருத்தல்.

**2.2.** சக்திகள்

I. கருத்துப் பரிமாற்றிக் கொள்ளும் வகையிலான கலந்துரையாடல்

II. விடய ரீதியான விடயங்களை சிக்கலின்றி தெளிவுபடுத்தல், மற்றும்

III. உபாயமுறையிலான அணுகுமுறை ஆகிய துறைகளில் நிபுணத்துவம்.

**2.3.** நடத்தைசார் திறன்கள்

I. பரந்தளவிலான ஆய்வுசார் நோக்கு
II. சிறந்த தொடர்பாடல் மற்றும் நடத்தைசார் பலம்
III. மாற்றங்களுக்கு இணங்கியொழுகுதல் மற்றும் மேம்படுத்தலுக்குள்ள போக்கு

**3.0.** தெரிவு செய்துகொள்ளும் முறை

தகைமைவாய்ந்த விண்ணப்பதாரி ஒருவரை தெரிவு செய்துகொள்வதானது, கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் அனுபவம் பற்றிய சுருக்க விபரத்தை (CV) அடிப்படையாகக் கொண்டு சேவை முதுமை மற்றும் திறமையின் ஒழுங்குவரிசையில் மதிப்பீடு செய்து, நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தி மேற்கொள்ளப்படும். தகைமைவாய்ந்த மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான விண்ணப்பதாரிகள் சிலர் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

தகைமைவாய்ந்த விண்ணப்பதாரியொருவரை தெரிவு செய்துகொள்வதானது, நேர்முகப் பரீட்சையின் போது சேவை முதுமை மற்றும் திறமைசார் ஒழுங்குவரிசையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

**3.1.** புள்ளி வழங்கும் நடவடிக்கைமுறை

**3.1.1** பணிப்பாளர் (மறுசீரமைப்பு)

| தகவுதிறன் | உச்சளவான புள்ளிகளின் எண்ணிக்கை | மதிப்பீட்டு முறையியல் |
|---|---|---|
| சேவை முதுமை<br>கூடுதலான சேவை முதுமையைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிக்கு உச்சளவான புள்ளிகள் வழங்கப்படும் என்பதுடன், ஏனைய விண்ணப்பதாரிகளுக்கு தமது சேவை முதமையின் ஒழுங்கு வரிசைக்கு அமைய விகிதாசார அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>குறிப்பு : புள்ளி வழங்கும் போது திருப்திகரமான சேவைக் காலம் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்படும் | 50 புள்ளிகள் | கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் அனுபவம் பற்றிய சுருக்க விபரம் (CV) / நேர்முகப் பரீட்சை |
| அனுபவம்<br>சர்வதேச உறவுத் துறையில் அனுபவம் அல்லது சர்வதேச நிறுவனங்களை ஒரங்கிணைப்புச் செய்தல் அல்லது வெளிநாட்டு நிதி வழங்கப்படும் கருத்திட்டங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளை நிறைவேற்றியுள்ளதன் மூலம் பெற்றுக் கொண்டுள்ள அனுபவம்.<br><br>விண்ணப்பதாரி குறித்த விடயத்துக்குப் பொறுப்பாக நடவடிக்கை மேற்கொண்டுள்ள காலஎல்லை, அமைச்சின் செயலாளர் அல்லது திணைக்களத் தலைவரினால் கடமை பொறுப்பளிக்கப்பட்ட கடிதங்களின் | பின்வருமாறு 20 புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் அனுபவம் பற்றிய சுருக்க விபரத்தின் 4.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள அனுபவத்திற்கு 10 புள்ளிகள் வழங்கப்படும்<br><br>குறித்த விடயப்பரப்புக்கு திசைமுகப்படுத்தி இணங்கியொழுக எடுக்கும் காலம் (சர்வதேச உறவுத் துறையில் — புள்ளி | கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் அனுபவம் பற்றிய சுருக்க விபரம் (CV) / நேர்முகப் பரீட்சை |

<table>
<tr>
<td>பிரதிகளை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படும். அவ்வாறான சகல கடிதங்கள், கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சா தகைமைகள் பற்றிய சுருக்க விபரங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.<br><br>சர்வதேச உறவுத்துறை / சர்வதேச நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு /வெளிநாட்டு நிதி வழங்கப்படும் கருத்திட்டங்களை வழிப்படுத்தல் பற்றிய துறைகளில் குறித்த விடயப்பரப்புசார் திசைமுகப்படுத்தலுக்கு இணங்கியொழுகும் அளவு, அறிவு அல்லது தேர்ச்சியின் பலம் மதிப்பீடு செய்யப்படும். புள்ளி வழங்கல், பின்வரும் தலைப்புக்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொழிப்புக் குறிப்பை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுவதுடன் மேற்படி பொழிப்புக் குறிப்பு, அரச சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 02/2022 இன் இணைப்பு II இற்கமைய, கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் அனுபவம் பற்றிய சுருக்கக் குறிப்பில் உட்புகுத்தல் வேண்டும்.<br><br>தலைப்பு<br>அரசதுறையின் மறுசீரமைப்பு தொடர்பாக சர்வதேச நிறுவனங்களுடன் தாங்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ள ஒவ்வொரு சவால்மிக்க சம்பவத்தையும் சுருக்கமாக விபரித்து, அனுபவம் ஊடாக தாங்கள் பெற்றுக் கொண்டுள்ள அறிவை விபரிக்குக (உச்சளவாக 150 சொற்கள்)</td>
<td><table>
<tr><td>அல்லது சர்வதேச நிறுவனங்களின் நிருவாக ஒருங்கிணைப்பு பற்றிய அனுபவம்)</td><td></td></tr>
<tr><td>ஆண்டு 3 ≤ 5</td><td>04</td></tr>
<tr><td>ஆண்டு 5 ≤ 6</td><td>08</td></tr>
<tr><td>ஆண்டு 6 ≤</td><td>10</td></tr>
</table>
10 புள்ளிகள்<br>பெற்றுக் கொண்டுள்ள அறிவு / தேர்ச்சி, கல்வித் தகைமை மற்றும் தொழில்சார் தகைமை பற்றிய சுருக்க விபரத்தின் வினா இலக்கம் 4.3 இற்குரிய விடை மற்றும் நேர்முகப் பரீட்சையைக் கவனத்தில் கொண்டு மதிப்பீடு செய்யப்படும்.<br><br>சர்வதேச உறவுத்துறை / சர்வதேச நிறுவனங்களின் ஒருங்கிணைப்பு /வெளிநாட்டு நிதி வழங்கப்படும் கருத்திட்டங்களை வழிப்படுத்தல் பற்றிய துறைகளில் குறித்த விடயப்பரப்புசார் திசைமுகப்படுத்தலுக்கு இணங்கியொழுகும் அளவு, அறிவு அல்லது தேர்ச்சியின் பலம், அரச சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 02/2022 இன் இணைப்பு II இற்கமைய மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும்.</td>
<td></td>
</tr>
<tr>
<td>தொழில்சார் தகைமைகள்<br><br>பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகமொன்றிலிருந்து அல்லது பட்டமளிக்கும் நிறுவனமொன்றாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட இலங்கை நிர்வாக சேவை பிரமாண குறிப்பின் 13.2</td>
<td>10 புள்ளிகள்<br><br>அ. ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட பட்டப் பின் படிப்பு – புள்ளி – 7<br>ஆ. வகுப்பறையில் கற்றலை அடிப்படையாகக் கொண்ட பட்டப் பின் படிப்பு – புள்ளி – 6<br>இ. பட்டப் பின்படிப்பு டிப்ளோமா – புள்ளி – 4<br>ஈ. பட்டம்/பட்டப் பின் படிப்புச் சான்றிதழ் – புள்ளி – 2</td>
<td>கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் அனுபவம் பற்றிய சுருக்க விபரம் (CV) / நேர்முகப் பரீட்சை</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| (அ) i இல் குறிப்பிடப்பட்ட பிரிவுகளில் பட்டப் பின் படிப்பை பெற்றிருத்தல்.<br><br>2) தகவல் தொழில்நுட்ப துறையில் வெளிநாட்டு நிதி வழங்கும் கருத்திட்டங்களை வழிப்படுத்தல் பற்றிய பயிற்சி*<br><br>ஆங்கில மொழித் தேர்ச்சி*<br><br>*உச்சளவான தகைமைக்கு மாத்திரம் புள்ளி வழங்கப்படும். | அ. 3 மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் - புள்ளி – 2<br>ஆ. 10 நாள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் - புள்ளி – 1<br>இ. 3 நாள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் - புள்ளி – 0.5<br><br>அ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து அல்லது அரச பயிற்சி நிறுவகமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட ஆங்கில மொழி பற்றிய டிப்ளோமா/IELTS பரீட்சையில் ஒட்டுமொத்த புள்ளிப் பெறுமதி 6.5 அல்லது அதற்கு மேல், TOEFL – IBT 79 அல்லது அதற்கு மேல், TOEFL – CBT 213 அல்லது அதற்கு மேல், TOEFL – PBT அல்லது அதற்கு மேல், அல்லது ஆங்கில மொழி மூலமான முதுகலைப் பட்டம் - புள்ளி – 02<br><br>ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றிலிருந்து அல்லது அரச பயிற்சி நிறுவகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட ஆங்கில மொழி பற்றிய சான்றிதழ் - புள்ளி – 01 | |
| **சக்திகள்**<br>மேலே 2.2 பிரிவுக்கு அமைய, விண்ணப்பதாரியை ஊக்குவித்தலுக்கு உட்படுத்த வேண்டிய, பணிகளை விளைதிறன்மிக்கவாறு நிறைவேற்றுவதற்கு இருத்தல் வேண்டும்.<br>மேலே 2.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள சக்திகளுக்கு புள்ளி வழங்கப்படும். | 10 புள்ளிகள்<br>புள்ளி வழங்குவது, அரச சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 02/2022 இன் இணைப்பு II இற்கமைய மேற்கொள்ளப்படும். | நேர்முகப் பரீட்சை |
| நடத்தைசார் திறன்கள்<br><br>மேலே 2.3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, விளைதிறன்மிக்கவாறு மேற்கொள்ளத் தேவைப்படுத்தப்படக்கூடிய பணிகள் மற்றும் செயற்பாடுகள்<br><br>2.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள நடத்தைசார் திறன்களுக்கு புள்ளி வழங்கப்படும். | 10 புள்ளிகள்<br>புள்ளி வழங்குவது, அரச சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 02/2022 இன் இணைப்பு II இற்கமைய மேற்கொள்ளப்படும். | நேர்முகப் பரீட்சை |

குறிப்பு 1: மேலே புள்ளி வழங்கும் நடவடிக்கைமுறையில் "அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்" என்பதனால் இலங்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு பல்கலைக் கழகம் கருதப்படும்.

குறிப்பு 2: மேலே புள்ளி வழங்கும் நடவடிக்கைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள சகல பட்டப் பின் படிப்புத் தகைமைகளும், இலங்கை பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள பல்கலைக் கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும் என்பதுடன், வேறு பட்டமளிப்பு நிறுவகங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அவ்வாறான தகைமைகள் மேற்படி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**செயலாளர்,**

**நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு.**

...................... 2023.